




ஓலை 176| ஓசை 299| மே 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிமணி தேசிக விநாயகம்

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற**

## பொருள்

**ஒருவன் தன் மனதில் குற்றம் (தீய சிந்தனை) இல்லாமல் தூய்மையாக இருப்பதே சிறந்த அறமாகும். மனத்தூய்மை இல்லாமல் வெளியில் செய்யும் ஆரவாரமான செயல்கள் அனைத்தும் அறம் ஆகாது, அவை வெறும் போலித்தனமே ஆகும்.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# உலகத் தாய்மொழி தமிழே!

பாவகை : எண்சீர் மண்டிலம்

மண்ணுக்கு முன்மலர்ந்த முதல்மலரே என்றும்
மூப்புவாரா சீரிளமை மொழிமலரே தமிழே!
மண்வந்த மொழிமலர்கள் உன்றன்வேர் சொற்கள்
கொண்டுதாம் மலர்ந்ததனால் தமிழ்நீயே முதன்மை;
மண்ணகத்தே சீரோங்கித் தழைத்திடினும் இன்றும்
மணம்வீசும் நூற்செல்வம் நிறைந்தநீயே தொன்மை;
எண்மையிலும் ஒண்மையிலும் வளமையுடை செம்மை
இயமையுடன் வியன்மைமிகு செந்தமிழே போற்றி!

தூய்மையுடன் தாய்மைகுணம் பெற்றிளங்கும் தமிழே!
தூய்மையுடன் வலிமைமிகு தனித்தமிழாய் ஒளிரும்
ஆய்மைநிறை வான்மைவெளி, புவிமைவெளி ஆய்ந்த
ஆற்றலுடை அறிவியல்மை கொண்டிளங்கும் தமிழே!
வாய்மைநிறை மெய்மையுடை வளமைதன்ன கத்தே
வண்டமிழாய் நிறைமைபுகழ் நீண்டிளங்கும் தமிழே!
மாய்மையின்றி பெருமையாலே திருமையுடன் துளங்கும்
மும்மையான இனிமைநிறை பைந்தமிழே போற்றி!

ஈகைகுணம் ஈகிதன்மை அன்புடைமை ஈண்டு
இறைமைபண்பு அறிவுடைமை ஒழுக்கநிலை இணைந்து
வாகைசூடி ஈடுஇணை இல்லாமல் இன்றும்
வெகுளாமை இருக்கணின்றி விளங்கும்இன் தமிழே!
சோகைநிறை சோம்பலுடை பிறமொழிக்கே உணர்வு
சூத்திரத்தை ஊட்டுகிற மறவமிகு தமிழே!
தோகைமயில் அழகுடனே துளங்குகின்ற தமிழே
திகட்டாத தெள்ளமுதே! ஞாலத்தில் வாழி!

நான்மறையும் நானிலத்தில் நிறைந்தவொற்றை மறையாய்
நற்றமிழே வள்ளுவந்தான் என்றுணர வைத்தாய்;
கான்நிறைந்த மரங்களொப்ப உன்னுள்ளே தமிழே
கணக்கற்ற இலக்கியங்கள், இலக்கணங்கள் கலைகள்
வான்முட்டப் பண்பாடும் குவித்துள்ளாய்; ஆக,
வடவரென்ன வையத்தார் போற்றிடவே வாழி!
ஊன்வளர்க்கத் தமிழரெல்லாம் வெறுத்தாலும் வாழி
உலகமொழி அத்துணைக்கும் தாய்மொழிநீ தமிழே!






# செய்ந்நன்றியறிதல்

பாவகை : குறள் வெண்பா

01. பதமாய் உதவியே பற்றியோர் தம்மை
கதமின்றி உள்ளிடக் கல்.

02. இன்சொல் கழறியே இன்னலைப் போக்கியோரை
நன்றியுடன் நோக்கலே நன்று.

03. செய்த உதவியின் செஞ்சம் அறிந்திட்டே
செய்கடன் செய்தல் சிறப்பு.


04. நன்றியைக் கூறலே நல்லோர் கடனாமே
கன்றுதல் விட்டே களி.

05. அன்றவர் செய்தவை அன்புடன் எண்ணியே
நன்றி நவிலல் நினை.



கவிஞர் செ. கலைவாணி

கண்ணாடித் துகள்களில்
முகம் பார்க்கும் உதயன்.
கூசுகிறது கண்கள்.
/
சொல் கொண்டு
முடியட்டும்
மௌனத்தவம்.
/
பேசாத விழிகளில்
பேசும் அளவற்ற
சொற்கள்.
/
திரித்த பஞ்சு
திமிருடன் நுழைகிறது
ஊசியின் காதில்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# எழுந்து வா என் தோழா

வீழ்ந்தது போதும் வீரநடை போடு
தாழ்ந்த மனதைத் தவிர்த்திடு - நாளும்
ஆழ்ந்தே சிந்தித்தால் அருமை அறிவாயே

உயர்வாய் பல உயரம் காண
மகிழ்வாய் வெற்றி உன் காலடியில்
நெகிழ்வாய் வீழ்ந்தபின் எழுந்த போது
நிறைவாய் முயன்றிடப் பலன் தருமே



இமயம் கூட உன் முன்னே குன்றாய்
இதுவும் கடக்கும் காலம் உனதாய்
மதுவும் விருந்தும் மனதை மாற்றும்
மறந்தும் தவறை மீண்டும் செய்யாதே

பள்ளியில் கற்ற பாடத்தின் வழி நடப்பாய்
பார்வையில் தவறும் காட்சியும் மாறியே
பயனே விளையா காரியம் தவிர்த்தால்
பயமே இல்லை என்றே நினைப்பாய்

முயற்சி தொடர்ந்து செய்திடல் சிறப்பு
முயலுதல் முதலில் தொடரின் வெற்றி
அயர்ந்தால் அனைத்தும் பின்னர் வீணே
அமுதும் ஒருநாள் விஷமாய் மாறுமே

கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன் @ பகலவன், உடுமலைப்பேட்டை

இறுக்கத்தின் வெளிப்பாட்டை
இதழ்களினால் வெளிப்படுத்தலாமோ
இதயத்தின் வாசல்கள்
இனிமையைத் தேடிடுமோ

முன்னிறுத்தும் சொற்கள்
முகமலரோடு பிறக்கட்டுமே
முல்லையின் வாசங்களும்
முந்தியே பிறக்கட்டுமே



விதை விதைப்பவன்
விளைச்சலைப் பெறுவானே
விதைத்திடும் மொழியின்
விதைகள் வீறுகொள்ளட்டுமே

வானுயர வளர்ந்திட
வாதிடுவதே சாதகமல்லவே
வாழ்வின் ஆதாரம்
வாய்மையில் தோன்றுமே

இன்னல் தரும்
இழிந்தவை தேவையில்லையே
இவ்வுலகின் நாட்களில்
இனியவையே நாடலாமே

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# இயற்கையின் மாற்றம்

அமைதியான காடுகளின்
அடங்காத ஆவேச கூச்சல்

அழகான கடலின் மடியில்
ஆக்ரோஷத்தின் கூக்குரல்

தென்றலாய் வீசிய காற்றின்
முகத்தில் புயலின் காயங்கள்

தூறலாய் விழுந்த விளையாடிய
மழைநீரின் கோபம்

மௌனமான மரங்களின்
வேகமான பேயாட்டம்

மண்சரிவு என்ற ஆட்டத்தில்
நிலமகளின் நடுக்கம்

இயற்கையே என்னவாயிற்று
உனக்கு கேள்விகள் மின்னும்
மின்னல்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# கம்மாக்கரை நெறஞ்சிருக்கு



கம்மாக்கரை நெறஞ்சிருக்கு
காடெல்லாம் வெளைஞ்சிருக்கு

பருவம் தவறாம
மழையும் பொழிஞ்சாச்சு
காலம் கடத்தாம
கழனியையும் உழுதாச்சு

வெதையையும் வெதச்சு
பக்குவம் பாத்தாச்சு
அளவா தண்ணிபாய்ச்சி
அக்கறையா இருந்தாச்சு

களையெல்லாம் கண்ணும்
கருத்துமா பிடுங்கியாச்சு
கம்மாக்கரை நெறஞ்சிருக்கு
காடெல்லாம் வெளைஞ்சிருக்கு

பயிரெல்லாம் செழிப்பாச்சி
கதிரும் விட்டாச்சி
பருவத்துல அறுவடையும்
செஞ்சி முடிச்சாச்சி

மனசும் நெறவாச்சு
மகிழ்ச்சியும் வந்தாச்சு
தானியங்களும் தரமாச்சு
மூட்டைகளும் நெரம்பிடுச்சு



உழவனும் உற்சாகமாகி
உவந்தே நின்னாச்சு
அகிலத்தில் உள்ள
அனைவரும் பசியாறியாச்சு

உழவனின்றி உழவில்லை
உழவில்லை எதுவுமில்லை
விவசாயத்தை மறந்துட்டா
விதியும் சதியாகிடுமே

விளைநிலத்தை விலைநிலமாக்காது
விளைச்சலை பெருக்குவோமே
ஏருபூட்டி உழுதிட
ஏற்றமது வந்திடுமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# மேகங்கள்

வானில் வலம் வரும்
மஞ்சு என்பது அவள் நாமம்
வெண்மையாய்த் தோன்றிடுவாள்
சலவை செய்த விரிப்பாய்
வானை என்றும் வலம் வந்திடுவாள்

வெள்ளைக்கு இல்லை கள்ளச்சந்தை
உனக்கும் இல்லை போட்டிச் சந்தை
கவலைகள் கழுவி
அழுது வடித்துக் கன்னி நின்றாள்
வெண்பஞ்சு தூய்மை கொண்டு



சோகங்கள் அளவின்றி மூடியது
கறுப்பென நின்ற அவள் தேகம்
சோர்வின்றிச் சோதனைகளை எழுதி
தேர்வில் பெற்றாள் வெட்டுப்புள்ளி

உன் வேதனை என்றும்
உனக்குச் சொந்தமில்லை
கண்ணீர் மழையாய்த் தூவி
கரைந்த வெண்பஞ்சு மேகமாய் நிற்கிறாய்

மேகங்கள் ஒன்றையொன்று முட்டிக்கொள்ளும்போது
அடையும் வேதனை எவரும் அறிவதில்லை
மேகங்கள் தாங்க முடியாது
வடித்து நிற்கும் மழையைக் கண்ணீராய்

வேதனை சோதனைகளை வாழ்வில் தாங்கி
வெண்மை நிறம் அடைந்து
வெளியே வலம் வரும்
வெண்பஞ்சு மேகம் நீயா

கவிஞர் திருமதி ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை


அலை வெல்லும் நாணல் தாழ்
அல்லல் தீர்க்கும் மொழி
ஆன்றோன் ஆக்கம் செழிக்க மிளிரும்
அமைதி நிறைந்த நாடு.



கவிஞர் செ. தமிழ்நேயன்

# கர்ணனின் நட்பு

தேரோட்டி மகன் கர்ணன்
அவமானம் தாங்கி நின்றான்
அரங்கில் வந்த துரியோதனன்
நட்புக்கரம் நீட்டி நின்றான்



அங்கதேசம் தந்து சிரித்தான்
மன்னனாக்கி மகிழ்ந்து நின்றான்
சாதி பார்க்கா தோழமை அது
நன்றி மறவா நட்பு அது

உயிரே போனாலும் போகட்டும்
நட்புக்கு துரோகம் செய்யேன்
என்றே கர்ணன் சூளுரைத்தான்
குருச்சேத்திரம் வரை நின்றான்

கவச குண்டலம் ஈந்தான்
இந்திரனுக்கு தானமிட்டான்
உயிரும் கொடுத்தான் நட்புக்காக
நட்பின் இலக்கணம் ஆனான்

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறனை (இலங்கை)

# ஹைக்கூ கவிதைகள்

யானையின் தும்பிக்கைகள்
உறவாடுகின்றன
கூட்டு வாழ்வு

குட்டி யானை
குளிர்மையோடு இருக்கிறது
தாயின் பாசம்

யானையின் காதுகள்
விசாலமாக இருக்கிறது
நீர் நிலை

யானைகள்
நன்றாக வளர்ந்திருக்கின்றன
காடுகள்

காட்டு யானைகள்
அமைதியாக உறவாடுகின்றன
இயற்கை



கவிஞர் சேஹூமொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# மாற்றுத்திறனாளி



பிறவியி லெழவே பிறந்த வுயிரை
உறவின் வளமாக உணர்வு யிழந்ததே
சிறப்பின் வளமாய்ச் சிறந்த வாழ்விலே
திறமைக ளொடிந்தே தினமும் சோர்ந்ததே

பிறப்பி னோக்கம் பின்னோக்கு முன்பே
துறவியி னிலையாய் துயையின் றித்தவிக்குதே
கவலை மறக்க கடந்ததை மறந்தே
சுவராய் உள்ளம் சுமையாக திரண்டதே

வருத்தமே னிறைந்த வளமை அறமே
சுருக்க வாழ்க்கை சுருங்கிய னலமே
உறுப்பு களிழப்பு உள்ளத்தை கல்லாக்கி
சுறுசுறுப்பு மறந்தே சுகமும் கலைந்ததே

அசையா உடலாய் அங்கேயே நிற்கும்
தசையால் சோர்ந்தே தவணை பாசமே
துணையின்றி நடக்க துயரம் கொள்ளுதே
இணையாக நட்பாக யிறைவனை கேட்குமே

செல்வங்கள் ஆயிரம் சேர்க்கும் மனதும்
வல்லிய செயலாய் வளர்த்தல் குறையுதே
உலக வாழ்வில் உயர்வு கொள்ளாது
தலங்கள் நாடியே தன்னிறைவுத் தேடுதே

செல்லமாய் பெற்ற செண்பக தாயும்
வல்லிய கல்லாக்கி வளர்ப்பாரே புவியில்
பிறரின் இழிகுரலில் பிறழுமே நெஞ்சமும்
வரண்ட நதியாய் துடிக்குமே இரத்தம்

சாதனைகள் படைக்கும் சான்றின் வரியாய்
சரித்திர நிகழ்வில் சரிசம விகிதமே
எல்லையில்லா அன்பை என்றுமே கொண்ட
தன்னல மில்லா தரணியில் உயர்ந்தவரே

பிறரது மனதும் புண்படாது வாழ்ந்தால்
சிறந்த சமுதாயம் சிறக்குமே மண்ணில்
கருணை வரமாய் காத்திடும் இதயம்
பெருக்கும் அன்பியம் பெருமதிப்பு சூழவே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# தாதி

அன்பைத் தூவி ஆறுதல் தரும்
அம்மா போல நீயொரு நிழல்
வலியில் கூட சிரிக்க வைக்கும்
வாழ்க்கையின் மென்மை மொழி நீயே

கையில் மருந்து இருந்தாலும்
இதயத்தில் கருணை நிறைந்திருக்கும்
தூங்காத இரவுகளிலும் கூட
மற்றவர் நிம்மதிக்காய் வாழ்பவள் நீ

வெள்ளை உடை அணிந்த தேவதை போல
வாழ்வைக் காக்கும் தாதியே
உன் சேவைக்கு ஈடு எதுவுமில்லை
உன் மனசுதான் உலகின் அழகு



கவிஞர் தம்பிராஜா டிரோன்

# அரிதான சிறிது

சிட்டுக்குருவி அரியதோர்
அழிந்துவரும் உயிரினமிதில்
கல்குருவி இனமும் உண்டு
இந்தியாவில் மட்டுமே உளது

இந்தியப் பாரம்பரியம் ஆன்மா
என்றெல்லாம் போற்றுவரிதை
மனிதர்கள் பார்வையிலேயே
படாமல் ஒதுங்கி வாழும் இனம்



சிறிய செடிகள் புதர்களே
இதன் வாழ்விடம் சிறிய புழு
பூச்சிகளே இதன் உணவு
இரவுக்கேற்ற பெருங்கண்கள்

இதன் தொடர் வாழ்வென்பது
சுற்றுச்சூழல் சமநிலையின்
பெரியதொரு அடையாளமாம்
இவ்வற்புதப் படைப்பு

அழிந்தே போய்விட்டது எனத்
தீர்மானித்த நிலையில் இதோ இருக்கிறேன்
எனக் கர்நாடகக் காடுகளில்
தென்பட்டதாம் இவ்வரிய பறவையினம்

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

# என்னவன்

சிற்பத்தாரோ
நாளும் செதுக்கிய
சிலையின் உருவங்கண்டு
மகிழ்ந்தார்.

நானோ
என் மனம் செதுக்கிய
சிலையின் உருவங்கண்டு
நாளும் மகிழ்ந்தேன்.

ஆனால்,
சிற்பத்தார் செதுக்கிய சிலையை
கோவிலில் கண்டேன்
கடவுளாக,
அதுபோல்
என் மனம் செதுக்கிய சிலையை
மனக்கோவிலில் கண்டேன்
என்னவனாக.



கவிஞர் சி. லதா, திருப்பூர்

# எப்போது வரும் என் கைகாட்டி மரம்?

எப்போது வரும்
என் கைகாட்டி மரம்?
கொல்லையில் பூத்திருக்கும்
மல்லிகைப் பூவின் வாசம்
என் சிண்டு பிடித்திழுக்கிறது!

இருளை மிரட்டி
எழுந்த நிலவு
முற்றத்தில் கொடை சாய்ந்த
என்னை நோக்கி
கொள்ளென்று சிரிக்கிறது!

எதிர்வீட்டு அடுப்பங்கரையில்
பாத்திரங்களை உருட்டிவிட்டு
சாளரம் வழியாக குதித்து வெளியேறுகிறது
திருட்டுப்பூனை ஒன்று!

இருந்தும்

இருக்கும் நிலையிலேயே
அழுங்காமல் குலுங்காமல்
அதிராமல் அரற்றி அழுகையில்
கொல்லையில் வைத்திருந்த அரளிப்பூ நோக்கியே
என் விழிகள் ஆலவட்டம் போடுகிறது!

இளங்கன்னி என் நினைவு
எதிர் காற்றில் தேய்கிறது!



என் புயல் கரை ஒதுங்கும்
கரை தேடியே கரைகிறது
என் புலராத காலங்கள்!

எனக்கே எனக்கான
என் திசையைக் காட்டிடும்
கைகாட்டி மரம் எப்போது வரும்?

வசமாகும் பொழுதிற்காக
நிதமும் வாசலில் காத்திருக்கிறது
குலை தள்ளாத இந்த வாழை மரம்
ஒரு கோமகன் வரவிற்காக!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# இலக்கினை எட்டிட

அந்தி வானில் மறையும் பெருஞ்சுடர்,
சிந்தும் ஒளியில் மின்னும் பெருங்கடல்.
மண்ணில் விளையாடி மகிழ்ந்த சிறுவனோ,
விண்ணைத் தொடவே வியந்து குதிக்கிறான்!.
கால்பந்து மணலில் தனித்துக் கிடக்கவே,
மேற்பந்து நோக்கிக் கரங்கள் நீட்டுவான்.
மறைந்திடும் கதிரை கைகளில் ஏந்திட,
நிறைந்த ஆசையில் நெகிழ்ந்து பாய்கிறான்!.
பகலும் இரவும் இணையும் எல்லையில்,
அகிலம் மறந்தே ஆடும் பிள்ளையவன்.
ஆயிரங் கனவுகள் நெஞ்சில் சுமந்தபடி,
சூரியனை ஏந்தும் சுட்டிப் பையனே!
கரங்களில் தாங்குவது காட்சிப் பிழைதான்!
துறையைத் தேர்ந்தெடு! துவளாமல் முயன்றிடு!
உறுதி கொண்ட நெஞ்சமும் ஊக்கமும் கைகூட
வெற்றிக் கனியினை எட்டுதல் எளிதாமே!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

**1.**

காலம் காலமாக
காகம் வடையை திருடிவிட்டது
என்று
பழிசுமத்தும் நீங்கள்
கவனக்குறைவாகவும்
கண்காணிப்பில்
தெளிவும் இல்லாமல் இருந்த
பாட்டியை எப்போது
கண்டிக்க போகிறீர்கள்?




**2.**

புல்லுக்கட்டைப் போட்டு
தடவிக் கொடுத்து
புன்னகையோடு
அழைப்பதே
புறவாசலில் பதுங்கி உள்ள
கசாப்புக் கடைக்காரனிடம்
விற்பதற்குத்தான்
என்ன உண்மையை
ஆடுகளுக்கு எப்போது
புரிய வைப்பது?

**3.**

சாதி பார்க்காமல்
மதம் பார்க்காமல்
மக்களின் மனம் குளிர
ஏற்றிச்சென்ற
என்னை நன்றியில்லாமல்
சாதிக் கலவரத்தின் போது
எதற்கு
கொளுத்தி வேடிக்கை
பார்க்கிறீர்கள்?

கவிஞர் முனைவர் அ. ச. மு. முனியாண்டி, திருவில்லிபுத்தூர்

# பேருந்து நிறுத்தம்

இறங்கும் இடம் தெரியாமல்
ஏறும் நெடுந்தூரப் பயணம்!
ஏறாமல் தப்பிக்க முடியாது
இறங்காது போக முடியாது!
வழித்துணையாய் நம்மோடு வருவார் பலர்!
ஆட்டமும் கொண்டாட்டமுமாய்
வழியோடு போகலாம்!
யாரும் நமக்கு சொந்தமில்லை
கடைசி வரை வருவோர் இல்லை!
ஓட்டுநர் துணையோடு போனால்
பாதைகள் கூட பயமில்லை!
புயலிலும் மனம் தடுமாறாது!
சிலர் நினைவாய் மறைந்தாலும்
சிலர் நிழலாய் தொடர்ந்தாலும்
நம் பயணம் நின்றுவிடாது!
வந்த இடம் மண்ணாகலாம்
செல்லும் இடம் விண்ணாகலாம்
இடையில் வாழும் இந்த நொடியே
இறைவன் தந்த வரமாகலாம்!
சிரித்துப் போனால்
சுமை குறையும்!
பகிர்ந்து சென்றால் வழி இனிக்கும்!
இறுதியில் எதையும்
எடுத்துச் செல்லாமல்
வெறுங்கையாய் போக!
இருப்பவர்களுக்கு நம்
நினைவுகள் மட்டும் நிலைத்திருக்கும்!




கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை.119

# கனா கண்டேன்

கைகளில் அடங்கும் ஆகாயம்
கையடக்கத்தில் அழகு நிலா
பிடித்து முத்தமிடும் காற்று
கடித்து சுவைக்கும் தேன்கூடு
மலரின் மணதின் நிறங்கள்
மனிதன் ஆழ்மனம் உருவம்
அதிகாலை விடியலில் வானவில்
அந்திப்பொழுது இருளில் சூரியன்

தூரல் தொடங்கும் இடம்
தூரிகை இல்லாத ஓவியம்
கண்களின் பிரசவத்தின் கண்ணீர்
குளித்திட கானல் நீர்
குளுமை நிகழாத மார்கழி
பனிமழை பொழியும் கோடை
வைகறை விழிக்காத ஓர்நாள்
பைகள் தாங்கும் விண்மீன்



எழுத்துகள் எழுதாத கவிதை
எழுந்து நடக்கும் கடவுள்
நொடியில் ஆறும் காயம்
செடியில் காய்க்கும் பணம்
பிறரை நோகடிக்காத குணம்
பிறதாற்க்கு துடிக்கும் மனம்
சோதிடம் பார்க்கும் பிரம்மன்
சோதனை செய்யாத உடல்
இறப்பு இல்லாத பெற்றோர்
இனிவரும் காலங்களில் வேண்டுமே
கனா கண்டேன்
கண்கள் விழித்து

கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

# பூமிக்கு ஒரு கவிதை

கோடி உயிரை கொண்டவள் நீயே
தீதிலாமல் மக்களை காப்பவள் தானே.
ஆயிரம் பிறவி எடுத்து வந்தாலும்
அன்னை மடியே பூமித் தாயே!

மக்கள் உண்ணும் மனமகிழ் உணவை
உழவன் வழியே விளைவிப்பது நீயே.
காற்றும் மழையும் புறப்படும் முன்னே
உன்னைத் தாக்க புயலாய் கிளம்பும்.



பயிர்கள் வளர உணவும் நீரும்
வழங்கிட உதவி செய்பவள் நீயே.
நுண்ணுயிர் எல்லாம் உறங்கிடும் மடியாய்
இயற்கைத் தன்மை அளிப்பவள் நீயே!

மனிதன் செய்யும் பலவித தவறால்
மண்ணில் நஞ்சை சேர்வது கொடியது
செயற்கை உரத்தை இட்டதால் மண்ணும்
நஞ்சாய் மாறி மனிதன் மடிவான்.

மரங்கள் வளர சூழலைத் தருவாய்
உயிர்கள் வளர அனைத்தும் தருகிறாய்
உன்னால் பயனை அடைந்த மக்கள்
உனக்கு தீமையை செய்தே வருவர்.

காட்டில் விளைய கால்நடை உதவும்
கழிவுகள் அனைத்தும் உரமாய் மாறும்
அன்னை பூமியை அனைவருமா வனங்கி
அதனை காத்திட அளவிலா பயனே!

கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன்

# ஏமாற்றுக்காரன்

நல்வழி அறியாதவன்
நல்லோர் நட்பில்லாதவன்
அல்வழி அறிந்தவன்
அகோர குணமுடையவன்
நல்லவனாய் வேடமிட்டு
நாளும் வாழ்பவன்
நல்லவிதமாய் பேசி
ஏமாற்றும் வித்தைக்காரன்



மற்றவர் ஆசையை
முதலில் தூண்டுவான்
ஆசை வலையில்
அவர்களை சிக்கவைப்பான்
ஆசைக் கனவில்
மயங்கி சொக்கவைப்பான்
அதிலிருந்து மீளாமுடியாத
நிலையை உருவாக்கிவிடுவான்

இப்போது அவன்
சொல்வதை கேட்கவைப்பான்
பொய்யாக இருந்தாலும்
உண்மையென நம்பவைப்பான்
அவர்களை வைத்தே
பிறரையும் ஏமாற்றமுனைவான்
அதிலும் வெற்றியடைவான்
சிறப்பான ஏமாற்றுக்காரன்

ஏமாற்றுக்காரன் ஏமாற்றியது
உணரும் போது
ஏமாற்றுக்காரன் இன்னொரு
ஊரோ நாடோ
அவனின் வாசமாக
மாறி இருக்கும்
அங்கு இன்னொரு
விளையாடல் தொடங்கும்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# காதல் ராதையே

வாராயோ தோழி
அகத்தின் தாழ் திறவாயோ,
காதல் பாசுரம் பாடவே.

முதல் காதலாய்
நீ வரவே,
என் முழுக் காதலும்
நான் தருவேன்.



மழைப் பொழியாத
முகிலென நானே,
உன் தேடலில்
மிதக்கிறேன்.

காதலே! நீ யாரடி?
தேடி வருவாயோ- இல்லை
தேட விடுவாயோ.

யாக்கை மெலிந்தேன்
நீ வாராமல்,
யாவும் மறந்தேன்
உன் நினைவிலே.

உன் பாதம் பாராத
என் இதய வெளிகள்
வெறுமை ஆகிறதே.

என் ஜீவன் வாடும் முன்னே
வந்து சேர்ந்துவிடு என்னை.

எனக்கென பிறந்த
ராதையின் காதலில்
நான் கரைவது எப்போது?

ஏனடி இந்த தாமதம்?
தாங்குமோ
உன் கண்ணன் மனம்.

கண்ணே!
உன் விழியில்
என்னை தொலைத்து.


என் மனதில்
உன்னைத் தேடவே
காத்திருக்கிறேன்.

மீராவின் கண்ணனாய்
நானே!

கவிஞர் கார்த்திகாமணிகண்டன், கோவை

# என்னாளும் பொன்னாளே!

வாழ்விலே லட்சியத்தை
மூச்சாய் கொள்ள வேண்டும்.
உழைப்பிலே உண்மையும்
வார்த்தையிலே நேர்மையும்
வாழ்வில் உன்னை உயர்த்துமே.



அன்பை போற்றி உறவு வளர்க்கும்
பண்பு நாளும் வேண்டும்..
"உண்மை நட்பு" என்றுமே
உறவுக்கும் மேலே உயிர் கொடுக்கும்
உண்மையே!

வாழ்வின் வழிகாட்டலுக்கு
"மூத்தோரின் அறிவுரையும்"
சிந்தனைக்கு தனிமையையும்
சிறப்பாய் அமையும் என்றுமே.

இயற்கையை போற்றியே காக்கும்
நல்ல குணம் வேண்டும்..
வாழ்வின் மேன்மை உயருமே
நாளும் நாளும் நன்மையே.

இயற்கையை நேசித்து
இணைந்து இசைந்து வாழ்ந்துட்டால்
வளமை வந்து சேர்ந்திடுமே
நூறாண்டு காலமே.

இனிய சொல்லும் இதய அன்பும்
இனிமை சேர்க்கும் காலமே.
எந்நாளும் பொன்னாளாய்
வாழ்வே சிறக்கும் நன்னாளாய்!

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

என்
இயலாமை இழுத்துக்
கட்டாத நினைவுகளை.
எங்கோ இருந்து
பிடித்து கட்டுகிறது
உன் அசைவு

உன்னில்
காணாமல் போனவை
தன்னில்
துயரறியா தென்ற
எண்ணமோ

ஆயுள்
வாசமறியா மனமும்
ஆன்ம வாசமறியும்

கொண்டாடப்பட வேண்டியது
கொள்ளைப் போகும் முன்
வாழ்ந்திடும் நேரம்
கடிகார முள் கண்டறியுமா!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

புதைந்து தொலைந்து போனாலும்
உயிர் பெறுகிறான்
வாசகன்

பிரிய மனமின்றிப்
பிடிவாதம் பிடிக்கிறது
பிரியம்

அசையாக் குளத்தில்
அசைந்து கொண்டிருக்கிறது
வான் நிலவு

யாருமற்ற இடத்திலும்
நிரம்பி வழிகிறது
நிசப்தம்

யாரையோ
தேடித் திரிகிறது
அலை

காரணமின்றித்
தண்டிக்கப்படுகிறது
ஒற்றைச் செருப்பு



பரந்து விரிந்த வானமும்
சிறைப்படுகிறது
சாளரக் காட்சி

எதையோ சொல்லிப்
பேசிக் கொண்டிருக்கிறது
பெருமழை

கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று

அழகான துணையாகி
ஆக்கிரமித்துக் கொள்ளும்!
பேதங்கள் இல்லாத நுழைவிடமாகி
ஆழ்ந்து ஆட்கொள்ளும் நந்தவனம்!



புரட்டப் புரட்டப் புதியதோர் உலகம்
நம்முன் சுழலும்;
எங்கோ உள்ள இயற்கையைத்
தூக்கிவந்து மடியில் தவழவிட்டு
மயங்க வைக்கும்!

சிந்தனையைத் தட்டி எழுப்பும்;
சில எழுத்துக்கள் மனதை
வசப்படுத்தும்!
"அட! இப்படியும் இருக்குமோ?
இருக்க வேண்டும்!" என்ற எண்ணமும்
கூட வரும்!

ஆச்சரியங்கள் தோன்றும்,
மாற்றத்திற்குள் மனம் நுழையும்;
எதிலோ சிறுகீற்றாய்ச் சிறு மாற்றம்
தோன்றும்!

வாசிப்பின் வசந்தம்,
வைகறைக் காற்றைப் போல்
புதுப்பித்துப் போகும் மாயம்!

ஒரே இடத்தில் அமர்ந்து,
அமைதியான மனநிலைக்குள்
தள்ளும் அழகிய சொந்தம்!

விடாது துரத்தும் பந்தமாகி,
நித்தமும் தேடலுக்குத் துணையுமாகி,
நட்பிற்கு அழகு பாலமாகி,
நாள்தோறும் வாசிப்பின் வசமாகி
இதுவும் காதல்தான்!

வாசிப்பை நேசிப்போம்!

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

அன்பா பேசிய ஆத்மா
ஆத்தோடு போச்சுதம்மா.

ஊருக்கு போறேன்ம்மா என்று
கையாட்டி போன தேகத்தை விட்டு
உசுரும்தான் போச்சுதம்மா.

அடிபட்ட சேதி அறிந்து
பரிதவித்து நானும் வந்தேன்.
கண்ணா உன்னை கண்கொண்டு காணத்தானே.
கண்ணா எனை காணாமல் காற்றோடு கலந்தீரோ.

அரைநொடி கவன குறைவால்
ஆயுசுக்கும் எனை அழ வைத்து விட்டாரம்மா.
கண்ணீரும் வற்றவில்லை
கருத்தில் எதுவும் பதியவில்லை.
ஐயா திங்கள் கிழமை வந்தாலே
தேகம் தான் நடுங்குதய்யா.

விதியை நினைத்து
நானும் கடந்து போக பார்க்கிறேனே - ஆனால்
அடுத்த அடி கூட எடுத்து வைக்க முடியலேயே.

கண் போல பார்த்தீரே.ஊராரு
கண்ணடிதான் பட்டுபோச்சோ.
உருமாறி போறேனய்யா உன் உருவத்தை காணாமல்
உன் தேகத்தைத்தான் தேடிதேடி பார்க்கிறேனே.

தேகம் தான் நெருப்போடு கலந்ததை
கண் மூடி நினைக்கிறேனே
நெஞ்சும் தான் துடிக்குதய்யா.



ஆழியில கரைந்த உன்னை நினைத்து
ஆழ்மனசும் அலறுதய்யா.
என்னதான் முடிவென்று
எனக்கும்தான் தெரியலையே.

வீடும்தான் பொலிவிழந்து போச்சுதய்யா.
சிவன் அவன் ஆடும் ஆட்டத்தை
தாங்கதான் சக்தியில்லையே
நான் அவன் சக்தியில்லையே.

என் சக்தியெல்லாம் எடுத்துகொண்டு
என்னவன் தான் காற்றோடும்
கடலோடும் போனாரே.
நித்தம் கலங்கி கலங்கி கண்ணீர் விட
என்னை சபித்துவிட்டு

கவிஞர் சுமதி தசரதன்

# சிதிலங்களாய்

சிதிலங்களாய் தூவபட்டு
சிதைந்து போன மனநிலையில்
மழையும் தூறலெடுத்து போகும்.
விழிகள் ரெண்டிலே
நனையும் மலையென கன்னங்களாகிடும்.

விண்ணில் தோன்றி மறையும் விண்மீன்களாய்
நியாபக சுருக்கங்களில் மடிந்து போகும்.
ஏதொன்றினை பிரித்து பார்க்கும்
நியாபகம் தந்து செல்லும் பேர்வலியினை
வழித்து போடவேண்டுமோ ?



வழிந்தோடும் அருவியாய் கண்ணும் கசிகையில்
கன்னம் நனையும் வலிநீரும் அருவியாய் தெரிந்திடும்.

புரிந்திடா பொன்மனதையும்
கட்டி வைத்து வேடிகை காணும்
உறவுகளை என்ன செய்திடனும்.

துறந்து மறந்து போகும் வழியை தேடி
மூச்சிறைத்து வளி இழந்து
சுவாசம் பிழைத்தல் தகுமோ?

பிழைத்து போனதில் விளையும் வலியை
வழித்து விசிரியடிக்கும் வழி தெரியாமல்
சோர்தல் அகற்ற சிதிலங்கள் செய்து போன மாற்றம்
மாற்றி உற்சாகமேற்றும் வழிதான் காணலே.

கண்ணீரும் கரைந்தொளிக்குமென
மின்னி மின்னி வெட்டும் மின்னலாய்
நூலிடை மாற்றமென மாற்றம் தந்து போகுமோ காலம்.

காயமாற்றி வசந்தமேற்றி
தேற்றி போக தோள்பற்றி தரும் ஆறுதலும்
ஆளை தத்தடுக்க வேண்டுமோ.

கவிஞர் சுஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

கதவுகளோ
ஜன்னல்களோ
செய்யாதீர்கள்
இன்பமும்
துன்பமும்
திறந்தவெளிதான்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

## கொஞ்ச நேரத்தில்



கடின காரியம் என்ற எண்ணத்திலும்,
சரியாய் அமைய வேண்டும் என்ற
பயத்திலும் இருந்த நிலையில்

எளிமையாய்,
தன் திருப்தியாய்
முடிந்த கொஞ்ச நேரத்தில்

"செய்த பணியில் குறைபாடு!"
"பணியின் முன்னுரிமையில் தவறு செய்கிறாய்!"
"வேறு பணிகள் செய்யவில்லை!"
"இந்தப் பணியை ஏன் உடனடியாக முடிக்கவில்லை?"

என அடுக்கு அடுக்காய்க்
குற்றப்பத்திரிகை வாசித்தால்
தன் திருப்தியில் கிடைத்த நம்பிக்கை,
இருந்த இடம் இல்லாமல் போய்விடும்!

********************************************

## வெவ்வேறு வார்த்தைகளில்

எதிர்பார்த்து நடந்தால்
உள்ளத்தில் உவகை!
அடுத்ததற்கான நம்பிக்கை!
இன்னும் உயரம் போக வேண்டும் என ஊக்கம்!

நடக்கவில்லை எனில்
சோகம் நிறையும் மனம்!
என்ன செய்வது என்ற அவநம்பிக்கை!
இப்படியே போனால் என்னாவது எனப் புலம்பல்!


வெவ்வேறு வார்த்தைகளில்
இருந்தாலும்
விரும்புவது மனித மனங்கள்
ஒன்றை ஒன்றுதான்!
எண்ணியது கிடைக்க வேண்டும் என்பதே!

வார்த்தைகள் எல்லாம்
அந்தக் கணத்துச்
சூழ்நிலை பொறுத்தது!

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# அதிகார அகந்தை

அதிகாரம் எளியவரிடம் சென்றால்
அதில் ஏன் உயருகிறது குருதி அழுத்தம்?
ஆற்றாமை தூண்டும் அவதூறுகள்
எங்களை அசைத்திட இயலாது
அமைதியாய் கடந்து செல்கின்றோம்
அநாகரிகம் தவிர்ப்பதற்காக
ஆனால்
அநீதி தொடருமானால்
அனைத்திற்கும் பதில் உரைக்கப்படும்
அப்போது எழும் எதிரொலி
அணைக்க முடியாத
அனலாகி
அகந்தையைச் சாம்பலாக்கும்



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, வளையமாதேவி (சிதம்பரம்)

## வாசிப்பனுபவம்

கொஞ்சும் நினைவுகளோடு கொஞ்சும் கனவுகளை இணைத்து 21-ஆம் நூற்றாண்டிற்கு ஏற்ற முறையில் சிறுகதைச் செம்மல் இரஜகை நிலவன் ஒரு அழகான சிறுகதைக்களம் அமைத்துள்ளார். மறுமலர்ச்சிக் கருத்துக்கள் மலரும் நினைவுகள் புத்துயிரோட்டமாக எளிய நடையில் இனிய நிகழ்வுகளுடன் பொங்கி வரும் வெள்ளமெனக் கனவுகளுடன் கதைக்களம் அமைத்துள்ளார். இதில் 23 கதைகள் உள்ளன அத்தனையும் முத்துக்கள்




இயற்கை காதல் வீரம் சமூகம் விருப்பம் இன்பம் துன்பம் சீர்திருத்தம் புரட்சி ஞானம் விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் அனைத்தும் நிரம்பிய கதைக்கருக்கள் இதில் பேசப்படாத சுவைகள் இல்லை

பெரும்பாலும் வெளிநாட்டு மக்கள் சூழ்நிலைகளையும் ஊர்களையும் தெருக்களையும் இயல்பாகக் காட்சிப்படுத்தியிருப்பது கதாசிரியர் உலகளாவிய நாடுகளுடன் இணைந்து வாழ்ந்தவர் என்பதை அறிய முடிகிறது

தமிழுக்கு ஆதரவளித்து மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றம் வெளியீடு செய்திருப்பது சிறப்பு. இவர் ஒரு நல்ல கவிஞர் என்று அறிவேன் சிறந்த கதாசிரியர் என்றும் புரிந்துகொண்டதில் மகிழ்ச்சி சிந்தனைச் சிற்பி சிறுகதைச் செம்மல் என்று நன்கு உணர முடிகிறது

திசைகள் மாறாமல் கலாச்சாரம் அழியாமல் வரைமுறைக்குட்பட்ட கதைகள் ஆபாசங்கள் இல்லாமல் குடும்பச் சுமைகளை எடுத்துக்காட்டிக் காதலை அன்பைக் காட்டியுள்ளார். முதல் கதையில் உறவுகளின் வலியைக் காட்டியுள்ளார் இறுதி வரை அந்தக்கட்டமைப்பிலிருந்து பிசகாமல் அழகிய களமமைத்து இறுதியிலும் வசந்தங்கள் வரும் நேரம் என்று முடித்துள்ளார்

கவிஞர் தமிழ்மகள்வாசுகி, பெங்களூர்

## வாசிப்பனுபவம்

எனக்கு மிகவும் பிடித்துப் போன கதை கனத்துப்போன இதயங்கள் என்ற கதை உண்மையில் இதயத்தைத் தொட்டது அதே சமயம் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு வேலை செய்யும் இந்தியனின் நிலைமை கண்ணீர் வரவழைத்தது

இன்பம் பயந்து இனிமை சொரிந்து
துன்பம் விலக்கி தூய்மை வளர்த்து
அன்பைப் பெருக்கி அளவில் பெருகி
இன்பமாய் எழுந்துள்ள

இந்தக் கொஞ்சும் கனவுகளோடு நான் புத்தகம் ஒரு சிறந்த படைப்பு.





கவிஞர் தமிழ்மகள்வாசுகி, பெங்களூர்

# கவிமணி தேசிக விநாயகம்

## கட்டுரை

### பிறப்பும் கல்வியும்




கவிமணி 1876-ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேரூர் என்னும் கிராமத்தில் சிவதாணுப்பிள்ளை - ஆதிலட்சுமி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். தனது பள்ளிப் படிப்பை தேரூரிலும், உயர் கல்வியை நாகர்கோவிலிலும் முடித்தார். பின்னர் எம்.ஏ (M.A) பட்டம் பெற்று, ஆசிரியர் பயிற்சியும் பெற்றார்.

### ஆசிரியர் பணி

அவர் கோட்டாறு ஆரம்பப் பள்ளி, நாகர்கோவில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மற்றும் திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரி ஆகியவற்றில் சுமார் 36 ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகவும், பேராசிரியராகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். இவரது மென்மையான குணமும், கற்பிக்கும் திறனும் மாணவர்களால் பெரிதும் போற்றப்பட்டது.

### கவிமணியின் நூல்கள்




- அழகம்மை ஆசிரிய விருத்தம்
- ஆசிய ஜோதி , (1941)
- மலரும் மாலையும், (1938)
- மருமக்கள்வழி மான்மியம், (1942)
- கதர் பிறந்த கதை, (1947)
- உமார் கய்யாம் பாடல்கள், (1945)
- தேவியின் கீர்த்தனங்கள்
- குழந்தைச்செல்வம்
- கவிமணியின் உரைமணிகள்

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

### இலக்கியப் பங்களிப்பு


கவிமணியின் கவிதைகள் பண்டிதர் முதல் பாமரர் வரை அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் அமைந்திருந்தன.

குழந்தை இலக்கியம்: தமிழில் குழந்தைகளுக்காகத் தொடர்ச்சியாகப் பாடல்களை எழுதிய முன்னோடி இவரே. "தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு..." போன்ற இவரது பாடல்கள் இன்றும் உலகெங்கும் வாழும் தமிழ் குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**முக்கிய நூல்கள்:** 'மலரும் மாலையும்', 'மருமக்கள்வழி மான்மியம்' (சமூக விழிப்புணர்வு நூல்), 'கதர் பிறந்த கதை' போன்றவை இவரது புகழ்பெற்ற படைப்புகளாகும்.

**மொழிபெயர்ப்பு:** எட்வின் ஆர்னால்டின் 'Light of Asia' என்ற நூலைத் தழுவி, புத்தரின் வரலாற்றை விளக்கும் 'ஆசிய ஜோதி' என்ற உன்னத நூலைப் படைத்தார். பாரசீகக் கவிஞர் உமர் கய்யாமின் பாடல்களையும் தமிழில் அழகாக மொழிபெயர்த்தார்.

### சிறப்புகளும் மறைவும்



1940-ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், இவருக்கு "கவிமணி" என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. எளிமையான வாழ்வையும், காந்தியக் கொள்கைகளையும் பின்பற்றிய கவிமணி 1954-ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று தனது 78-வது வயதில் இயற்கை எய்தினார்.

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

நீ

நினைப்பது போலவே

நீ ஆகிறாய்.

ஆகவே

உயர்வாக சிந்தி!

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை